www.Padasalai.Net www.Trbtnpsc.Com

12 - ஆம் வகுப்பு

# அடைவுத் தேர்வு - 2023-24

Time : 1.30 Hrs

## வணிகவியல்

1. மேலாண்மை என்பது -------ன் செயல் ஆகும்,
அ) மேலாளர் ஆ) கீழ்ப்பணியாளர் இ) மேற்பார்வையாளர் ஈ) உயரதிகாரி

2. மேலாண்மை என்பது ஒரு ---------
அ) கலை ஆ) அறிவியல் இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

3. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்
அ) போயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

4. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ------- என்பர்
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

5. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு -------
அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

6. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

7. பின்வருவனவற்றுள் எது முக்கிய பணிகள் அல்ல?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்துதல்

8. -------ல் நிர்வாக செயல்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது
அ) ஒருங்கிணைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) பணியமர்த்துதல் ஈ) ஒழுங்கமைத்தல்

9. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணியமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்

10. -------ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன,
அ) செயலூக்கமளித்தல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) பணியமர்த்தல்

11. ------- முறை தனிப்பட்ட வலிமை மற்றும் பொறுப்பிற்கு முழு வடிவம் கொடுக்கிறது,
அ) குறியிலக்கு மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

12. குறியிலக்கு மேலாண்மை செயல்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

13. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க ------- உதவுகிறது.
அ) முதுகலை வணிக நிர்வாகம் ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) குறியிலக்கு மேலாண்மை

14. ------- உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது
அ) முதுகலை வணிக மேலாண்மை (MBM) ஆ) விதிவிலக்கு மேலாண்மை (MBE)
இ) குறியிலக்கு மேலாண்மை (MBO) ஈ) முதுகலை வணிக நிர்வாகம் (MBA)

15. குறியிலக்கு மேலாண்மையானது ------- என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது,
அ) பேராசிரியர் ரெட்டின் ஆ) ஜார்ஜ் ஒடியோர்ன் இ) ஹென்றி பயோல் ஈ) எப்.டபிள்யூ. டெய்லர்

16. நிதிச் சந்தை வணிக நிறுவனங்களுக்கு ------- உதவுகிறது,
அ) நிதிகளைத் திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
இ) விற்பனையை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு

17. மூலதனச் சந்தை என்பது -------க்கான ஒரு சந்தை ஆகும்,
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி இ) நீண்ட கால நிதி ஈ) மேற்கூறிய அனைத்தும்

18. முதல் நிலைச் சந்தை ------- எனவும் அழைக்கப்படுகிறது
அ) இரண்டாம் நிலைச் சந்தை ஆ) பணச் சந்தை இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுக சந்தை

19. உடனடிச் சந்தை என்பது நிதிக் கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் ------ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்,
அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில் இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

20. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்
அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பலமுறை

21. மூலதனச்சந்தை -----ஐ வழக்குவதில்லை
அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

22. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

23. முதல் நிலைச் சந்தை என்பது பத்திரங்களை / பிணையங்களை ------ முறை வியாபாரம் செய்யும் ஒரு சந்தை ஆகும்,
அ) முதன்முறை ஆ) இரண்டாம்முறை இ) மூன்றாம் முறை ஈ) பலமுறை



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

24, மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ........ ஆவர்,
அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

25, பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே -------ஆகும்,
அ) இந்திய உடனடி பங்கு மாற்றம் ஆ) எட்டுக்கடன் இ) பரஸ்பர நிதி ஈ) துணிகர நிதி

26, அழைப்பு பணச் சந்தையில் முதலீடு செய்யும் பணத்திற்கு -------உடன் அதிக நீர்மைத் தன்மையை வழங்குகிறது,
அ) குறைந்த இலாபத்தன்மை ஆ) உயர் இலாபத்தன்மை.
இ) வரையறுக்கப்பட்ட இலாபத்தன்மை ஈ) நடுத்தர இலாபத்தன்மை

27, பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு -------
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

28, குறுகிய கால நிதி ஆதாரங்களை ஏற்படுத்துவதற்காக பணச்சந்தையில் நிறும அமைப்புகள் வெளியிடும் கடன் ஆவணங்கள் -------- என்று அழைக்கப்படுகிறது,
அ) கருவூல இரசீதுகள் ஆ) வணிகத்தாள் இ) வைப்புச் சான்றிதழ் ஈ) அரசுப் பத்திரங்கள்

29, வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ........ என்று அழைக்கலாம்.
அ) வணிகத்தாள் சந்தை ஆ) கருவூல இரசீது சந்தை இ) வணிக இரசீது சந்தை ஈ) மூலதனச் சந்தை

30, சந்தைபடுத்தக் கூடிய உரிமையிலான ஆவணம். காலமுறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை -------என்று குறிப்பிடுகிறோம்,
அ) கருவூல இரசீது ஆ) வைப்புச் சான்றிதழ் இ) வணிக இரசீது ஈ) அரசுப் பத்திரங்கள்

31, -------இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்,
அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை இ) தேசிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

32, நாட்டில் -------பங்குச் சந்தைகள் உள்ளன, அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

33, தன்வணிகர் பங்குச்சந்தையில் ஈடுபடுவது
அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

34, நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர்
அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

35, நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர்
அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து

36, இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

37, செபியின் தலைமையகம் ------- ஆகும்,
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

38, கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ........ எனப்படுகிறது,
அ) பரஸ்பர நிதிகள் ஆ) பட்டியல் இ) மறு புறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஈ) புறத் தோற்றமற்ற பத்திரங்கள்

39, ஒவ்வொரு பங்குச் சந்தையின் ஆட்சிக் குழுவில் ------- உறுப்பினர்களை நியமிக்கும் பொருட்டு நிதி அமைச்சகம் செபியிடம் அதிகாரம் அளிக்கிறது, அ) 5 ஆ) 3 இ) 6 ஈ) 7

40, தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு ........ ஆகும்,
அ) ஜனவரி 1996 ஆ) ஜுன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

41, மனித வளம் என்பது ஒரு ------- சொத்து
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா இ) நிலையான ஈ) நடப்பு

42, மனித வள மேலாண்மை என்பது ----- மற்றும் ----- ஆகும்,
அ) அறிவியல் மற்றும் கலை ஆ) கோட்பாடு மற்றும் நடைமுறை
இ) வரலாறு மற்றும் புவியியல் ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

43, திட்டமிடல் என்பது ------- செயல்பாடு ஆகும்,
அ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ) பரவலான / ஊடுருவலான இ) அ மற்றும் ஆ இரண்டும் ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை,

44, மனித வள மேலாண்மை ------- உறவினை நிர்ணயிக்கிறது,
அ) அக. புற ஆ) முதலாளி. தொழிலாளி இ) உரிமையாளர். வேலைக்காரன் ஈ) முதல்வர். முகவர்

45, பணியாளர் சுழற்சி வீதம் என்பது நிறுவனத்தில் பணியாளர்களில் நிலை ----- பொழுது ஏற்படுகிறது,
அ) நிறுவனத்திற்குள் உள்ளே வரும் ஆ) நிறுவனத்தை விட்டு வெளியே செல்லும்
இ) சம்பளம் பிரச்சனையின் ஈ) மேலே குறிப்பிட்ட எதுவும் இல்லை,

46, ஆட்சேர்ப்பு என்பது ----- அடையாளம் காண்பதற்கான செயல்முறை ஆகும்,
அ) சரியான வேலைக்கு சரியான நபர் ஆ) நன்கு செயலாக்குபவர்
இ) சரியான நபர் ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

47, ஆட்சேர்ப்பு என்பது ----- மற்றும் ----- க்கு இடையே பாலமாக இருக்கிறது,
அ) வேலை தேடுபவர் மற்றும் வேலை வழங்குநர் ஆ) வேலை தேடுபவர் மற்றும் முகவர்
இ) வேலை வழங்குநர் மற்றும் உரிமையாளர் ஈ) உரிமையாளர் மற்றும் வேலைக்காரன்

48, விளம்பரம் என்பது ஒரு ----- ஆட்சேர்ப்பு வளமாகும்,
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

49, பணி மாற்றம் என்பது ஒரு -------ஆட்சேர்ப்பு வளமாகும்,
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) புறத்திறனீட்டல் ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை



CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

50, இணைய வழி ஆட்சேர்ப்பு என்பது -------மூலமே சாத்தியம்,
அ) கணினி ஆ) இணையம் இ) அகன்ற வரிசை ஈ) 4 ஜி

51, ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுத்தல் செயல்முறையின் இலக்கு -------
அ) சரியான நபர்கள் ஆ) சரியான நேரத்தில் இ) சரியான செயல்களை செய்வதற்கு ஈ) மேலே உள்ள அனைத்தும்

52, தேர்வு பொதுவாக ஒரு --------செயலாக கருதப்படுகிறது
அ) நேர்மறை ஆ) எதிர்மறை இ) இயற்கை ஈ) இவை ஒன்றும் இல்லை

53, பணியாளர்களை தேர்ந்தெடுப்பதில் பின்வருவனவற்றில் எவை பல்வேறு பண்புகளை அளவிட பயன்படுகிறது?
அ) உடல் பரிசோதனை ஆ) உளவியல் சோதனை இ) திறனாய்வு சோதனை ஈ) நிபுணத்துவம் சோதனைகள்

54, பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ------- அழைக்கப்படுகிறது,
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

55, முதலில் வேலை, அடுத்தது மனிதர் என்பது ஒரு ------- கோட்பாடு,
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

56, பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) வேலையில்லா நாட்களில் இ) தொழிற்சாலைக்கு வெளியே ஈ) விளையாட்டு மைதானத்தில்

57, சிறந்த வேலை செயல்திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன் நிலைகளை மேம்படுத்துகிறது?
அ) பயிற்சி ஆ) தேர்ந்தெடுப்பு இ) ஆட்சேர்ப்பு ஈ) செயல்திறன் மதிப்பீடு

58, பயிற்சி பெறுபவர் உயர் அதிகாரி அல்லது மூத்த தொழிலாளர்கள் மூலம் மிகவும் பயிற்சி பெறும் முறை?
அ) தொழிற்சாலைக்குள் பயிற்சி முறை ஆ) புதுப்பிக்கும் பயிற்சி
இ) பங்கேற்று நடித்தல் முறை ஈ) தொழிற்பயிற்சி முறை

59, ------- ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது,
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

60, பயிற்சி முறைகளை ---- மற்றும் ---- பயிற்சி என வகைப்படுத்தலாம்,
அ) வேலை சுழற்சி மற்றும் வேலை செறிவூட்டல் ஆ) பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி
இ) வேலை பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்பு ஈ) உடல் மற்றும் மனம்

61, பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றும் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்,
அ) விற்பனையாளர் ஆ) சந்தையிடுகையாளர் இ) வாடிக்கையாளர் ஈ) மேலாளர்

62, சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

63, [illegible] சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

64, கீழ்க்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி. விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது,
அ) பங்கு சந்தை ஆ) தயாரிப்பு பொருள் சந்தை இ) உள்ளூர் சந்தை ஈ) குடும்ப சந்தை

65, பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது
அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை இ) பத்திரங்களின் சந்தை ஈ) தேசிய சந்தை

66, சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை -------
அ) முற்றுரிமை முறை ஆ) பணத்திற்கு மாற்றுதல் இ) பண்டமாற்று முறை ஈ) தற்சார்பு உற்பத்தி

67, சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்?
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர் இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

68, கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக் கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக் கூறு ஈ) விலைக் கூறு

69, சந்தையிடுகை கலவை என்பது சந்தையிடுகை திட்டமிடல் மூலம் நிறுவனத்தின் குறிக்கோள் ---- தேவை மற்றும் மன நிறைவு மூலம் இலாபம் பெறுகிறது,
அ) மொத்த விற்பனையாளர் ஆ) சில்லறை விற்பனையாளர் இ) நுகர்வோர் ஈ) விற்பனையாளர்

70, கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

71, இணையம் மூலம் பொருட்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறையை ---- என்கிறோம்,
அ) பசுமை சந்தையிடுதல் ஆ) மின் சந்தையிடுதல் இ) சமூக சந்தையிடுதல் ஈ) மெட்டா சந்தையிடுதல்

72, இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

73, சமூக சந்தைபடுத்துதல் என்பது ---- உடன் தொடர்புடையது,
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை

74, சமூக ஊடக சந்தைபடுத்துதலை சிறப்பாக செயல்படுத்துவது ---- மாற்று விகிதத்தை அதிகரிக்கும்
அ) வாடிக்கையாளரிலிருந்து வாங்குபவராக ஆ) சில்லறை வியாபாரியிலிருந்து வாடிக்கையாளராக
இ) வாங்குபவரிலிருந்து மற்று ஒரு வாங்குபவராக ஈ) சந்தையாளருக்கு நேரடி தொடர்பு



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

75, தூய சில்லறை விற்பனையாளர் ---- என அழைக்கப்படுபவர்
அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள் இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்
76, நுகர்வோரியல் எனும் சொல் தோன்றிய ஆண்டு அ) 1960 ஆ) 1957 இ) 1954 ஈ) 1958
77, நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான்,எப்,கென்னடி இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு
78, பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டுஅ) 1962 ஆ) 1972 இ) 1930 ஈ) 1985
79, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01,01,1986 ஆ) 01,04,1986 இ) 15,04,1987 ஈ) 15,04,1990
80, நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ---- நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது,
அ) ஆகஸ்ட்டு 15 ஆ) ஏப்ரல் 15 இ) மார்ச் 15 ஈ) செப்டம்பர் 15
81, நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் ----
அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம் இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை
82, ------ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி
83, நுகர்வோரின் உரிமைகள் அவர்கள் கொண்டுள்ள நிலையில் ------ ஆகும்,
அ) அளவீடுகள் ஆ) விற்பனை அதிகப்படுத்துதல் இ) பொறுப்புகள் ஈ) கடமைகள்
84, ஜான்,எப்,கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையியல் இடம் பெறாதவை எது?
அ) பாதுகாப்பு உரிமைஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை
85, நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள ------ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமாகும்
அ) ரொக்க இரசீது ஆ) உத்திரவாத அட்டை இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்
86, தேசிய நுகர்வோர் மறுவாழ்வுக் குழுவின் தலைவர் யார்?
அ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி ஆ) பிரதம மந்திரி
இ) இந்தியத் தலைவர் ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல
87, மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவர் யார்?
அ) உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஆ) முதலமைச்சர் இ) நிதி மந்திரி ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல
88, மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர்நீதிமன்ற நீதிபதி இ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை
89, பொருட்களின் அல்லது சேவைகளின் மதிப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றிற்கு அதிகமாக இருந்தால் மாநில ஆணையத்திடம் புகார் தெரிவிக்கலாம்,
அ) ரூ,2 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ,5 இலட்சத்திற்கு மிகாமல்
ஆ) ரூ,20 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ,1 கோடிக்கு மிகாமல்
இ) ரூ,3 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ,5 இலட்சத்திற்கு மிகாமல்
ஈ) ரூ,4 இலட்சத்திற்கு மிகையாக ஆனால் ரூ,20 இலட்சத்திற்கு மிகாமல்

U. SANGEETHA, M.Com., B.Ed.,
PG Asst. (Commerce)
Govt. Hr. Sec. School
Kothandapatti - 635 815
Tirupattur District.

90, நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு (ஐஞ்இம) முதன்முதலில் நிறுவப்பட்டது,
அ) 1960 ஆ) 1965 இ) 1967 ஈ) 1987
91, யமஇஅ. ----. ----. ----. ----.
அ) மதிப்பு. நிச்சயமின்மை. சிக்கலானது. தெளிவில்லாதது ஆ) மதிப்பு தவிர்க்க இயலாதது நிறும மற்றும் அதிகாரம்
இ) மாற்றம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது நிறுமம் ஏலம் ஈ) மேற்கூறிய அனைத்தும்
92, ஜி,எஸ்,டி, என்பது ------ ---- ----
அ) சரக்கு மற்றும சமூக வரி ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
இ) சரக்கு மற்றும் விற்பனை வரி ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி
93, ஒரு நிறுவனத்திற்குள் உள்ள காரணிகள் ---- சூழல் ஆகும்,
அ) அக சிந்தனையாளர் ஆ) புற நோக்கியான் இ) சக மனிதர்கள் ஈ) மேற்கூறிய அனைத்தும்
94, வணிகத்தின் பரந்த சூழல் ஒரு ---- காரணியாகும்,
அ) கட்டுப்படுத்த முடியாது ஆ) கட்டுப்பாட்டிருக்கு உட்பட்டது இ) சமாளிக்க கூடியது ஈ) சமாளிக்க முடியாதது
95, இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள் ---- மற்றும் ---- ஆகும்,
அ) நேர்மறை மற்றும் எதிர்மறை ஆ) உட்புறம் மற்றும் வெளிப்புறம்
இ) நல்லது மற்றும் கெட்டது ஈ) அனுமதிக்கத்தக்கது மற்றும் அனுமதிக்க முடியாதது
96, -- புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது,
அ) உலகமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல் இ) தாராளமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமே இல்லை
97, பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைகள் துவங்க அனுமதிப்பது ---- ஆகும், அமைப்பதற்கு அனுமதிப்பதாகும், அ) தாராளமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல் இ) உலகமயமாக்கல் ஈ) பொது நிறுவனம்
98, ---- உரிமைகள் சர்வதேச மட்டத்தில் வலுவான அஸ்திரவாரத்தின் காரணமாக தைரியமான மேலாண்மை முடிவுகளை எடுக்கின்றன, அ) தனியார் ஆ) பொது இ) கார்ப்பரேஷன் ஈ) MNC இன்
99, ---- பொருட்கள். சேவைகள். மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தேசிய பொருளாதாரங்களுக்கு இடையில் தடைகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளாகும்,
அ) தனியார்மயமாக்கல் ஆ) தாராளமயமாக்கல் இ) உலகமயமாக்கல் ஈ) வெளிநாட்டு வர்த்தகம்
100, புதிய பொருளாதாரக் கொள்கை ---- ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது,
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com